# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2053/24 - 2018 ජනවාරි මස 10 වැනි බදාදා - 2018.01.10

*2053/24 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி 21/78*(xv)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாகக் கருதப்படுகின்றதான இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பீடங்கள் மற்றும் துறைகளைக் குறித்துரைக்கின்றதான (2017, நவெம்பர் 15 ஆந் திகதிய 2045/ 17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) 2009 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதிய 1603/ 35 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை அத்தகைய அட்டவணையின் நிரல்* I *இல் காணப்படுகின்ற "மானிடவியல்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்" என்னும் பதிவிற்கு நேரொத்ததான அவ்வட்டவணையின் நிரல்* II *இல் காணப்படுகின்ற "13. தத்துவம் மற்றும் உளவியல்துறை" என்னும் பதிவினை உடனடுத்துப் பின்வரும் பதிவினைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :-*

*"14. ஆங்கில மொழி கற்பித்தல் துறை".*

*லக்ஷ்மன் கிரியெல்ல,*
*உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2018, சனவரி 04.*

*01-669*


1A - PG 3859 —508 (2018/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*